MC.39 /20224

23.02.2026

RW2 -முருகேசன், த/பெ.பட்டமூப்பன், வயது–86

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆஜர்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் –12.04 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் –12.25 P.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 23.02.2026

(குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 43(2)ன் கீழ் சாட்சிக்கு அவரது முதன்மை சாட்சியம் நினைவுக்கூர்வதற்காக படித்து சொல்லப்பட்டது)

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:-

நீங்கள் யாருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளீர்கள் என்றால் எதிர்மனுதாரர் ராஜேஷ்கு சாட்சி சொல்ல வந்துள்ளேன். இவ்வழக்கு தாக்கல் செய்த நாளிலிருந்து நீங்கள் ராஷேசுடன் நீதிமன்றத்திற்கு வருகிறீர்கள் என்றால் சரிதான். உங்களுக்கும் ராஜேஷ்கும் என்ன தொடர்பு என்றால் ராஜேஷ் முடி திருத்தம் கடை வைத்துள்ளார் நான் அந்த கடைக்கு முடி திருத்தம் செய்யும்போது அவருடைய தகப்பனார் காலத்திலிருந்து 30 ஆண்டுகாலத்திற்கும் மேலாக அவர்கள் குடும்பம் பழக்கம். நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள் என்றால் நான் கட்டிட வேலை ஒப்பந்தத்தில் வேலை செய்து வருகிறேன். ராஜேஷ் கட்டியுள்ள வீடு நீங்கள் தான் கட்டிக்கொடுத்தீர்களா என்றால் இல்லை அவருடைய அண்ணன் கட்டியுள்ள வீட்டை நான் தான் கட்டினேன். ராஜேஷ் கடை மற்றும் வீடு நீங்கள் தான் மேஸ்திரி வேலை பார்த்தீர்கள் எனவும் அதன் காரணமாக தான் ராஜேஷ்கு ஆதராவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. ராஜேஷ் மற்றும் நீங்கள் எந்த ஊர் என்றால் ராஜேஷ் கடாம்பூர் நான் மிட்டாளம் இரண்டு ஊருக்கும் உள்ள தூரம் 4 கி.மீ ஆகும். உங்கள் ஊரில் கடைகள் உள்ளதா என்றால் முடி திருத்தம்

கடையை தவிர இதர கடைகள் உள்ளது. நீங்கள் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். நீங்கள் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டீர்களா என்றால் ஆமாம். உங்களுடைய வயது நீங்கள் தாக்கல் செய்த முதல் விசாரணை சாட்சியத்தில் 73 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் ஆதார் அட்டையின் அடிப்படையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் மனுதாரரை தெரியும் என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். மனுதாரரை உங்களுக்கு எவ்வாறு தெரியும் என்றால் அவருடைய அண்ணன் வீட்டிற்கு கட்டிடம் கட்டும் வேலைக்கு செல்லும்போது எனக்கு தெரியும். எதிர்மனுதாரர் முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ள விவரமும் நீங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ள விவரமும் ஒன்று தான் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் மனுதாரரின் கணவர் என்ற முறையில் சாட்சியம் அளித்துள்ள விவரம் நீங்கள் சொல்லுவது சாத்தியமில்லை என்று சொன்னால் நான் எதிர்மனுதாரரின் கடைக்கு செல்லும்போது அந்த விவரங்கள் எனக்கு தெரியவந்தது. எதிர்மனுதாரர் அவருடைய குடும்பத்தில் நடக்கும் விவரங்களை உங்களிடம் சொல்லிவிடுவார் என்றால் நான் அவர்கள் விஷயம் தொடர்பாக பஞ்சாயத்து செய்யும்போது தெரியவந்தது. உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் மனுதாரர் சாப்பிடுவதற்கு கேட்பதை எதிர்மனுதாரர் வாங்கி தருவதாக சொல்லியுள்ளீர்கள் என்ன கேட்பார் என்றால் எனக்கு தெரியாது. சிக்கன் 65 மனுதாரர் கேட்பதாக சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் நான் அவ்வாறு சொல்லவில்லை. தற்போது என்ன தொழில் செய்கிறீர்கள் என்றால் எதுவும் செய்யவில்லை உங்களை யார் பராமரித்து வருகிறார்கள் என்றால் என் பிள்ளைகள் பராமரித்து வருகிறார்கள். உங்களுக்கு ராஜேஷ்யை பற்றி எல்லா விவரங்களும் முழுமையாக தெரியும் என்றால் தெரியும். ராஜேஷ்யை பற்றி எல்லா விவரங்களும் முழுமையாக தற்போது வரை தெரியுமா என்றால் தெரியும். ராஜேஷ்கு இரண்டாவதாக திருமணம் நடந்ததில் நீங்கள்

பங்கேற்றீர்களா என்றால் அவருக்கு திருமணமே ஆகவில்லை. ராஜேஷ்கு இரண்டாவது திருமணம் ஆகி இரண்டாவது மனைவி மூலம் தட்ஷிதா என்ற பெண் குழந்தை உள்ளார் என்று சொன்னால் அது தவறான சங்கதி ஆகும். நீங்கள் ராஜேஷின் கட்டுப்பாட்டில் தான் உள்ளீர்கள் எனவும் உங்களை ராஜேஷ் தான் பராமரித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் நீங்கள் உங்கள் குடும்பத்துடன் இல்லாமல் ராஜேஷ் உடன் தான் இருந்து வரும் காரணத்தினால் அவருடன் எல்லா இடங்களிலும் நீதிமன்றம் உட்பட சுற்றி வருகிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பாணவை அதனால் ஏற்றுக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur

Chief Judicial Magistrate,
Tirupathur.